| O.S.No. 406/2021 | PW1: திரு. செல்வம்<br>த/பெ. திரு. தொப்பலான் | 08-04-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

1. நான் இந்த வழக்கினை 5 பேர் மீது போட்டுள்ளேன். வட்டார வளர்ச்சி அலுவலர், அனக்காவூர் அவர்கள் மீது வழக்கு போடவில்லை. 6–வது பிரதிவாதியாக வட்டார வளர்ச்சி அலுவலரை நான் பார்ட்டியாக சேர்த்துள்ள விவரம் எனக்கு தெரியாது. நான் இருக்கும் பகுதியானது செய்யாறு வட்டார வளர்ச்சி அலுவலரின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி பதில் தாக்கல் செய்த பிறகும் செய்யாறு வட்டார வளர்ச்சி அலுவலரை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

2. செங்கம்பூண்டி மேல்குவளை சாலைக்கு தார் ரோடு போடுவதற்குத்தான் வட்டார வளர்ச்சி அலுவலர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த கல் சாலையைத்தான் தார் சாலையாக மாற்றுவதற்கு உத்தரவு போட்டுள்ளார்கள். ஏற்கனவே இருக்கும் சாலையை தார் சாலையாக மாற்றுவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் என்னுடைய இடத்தில் சாலை போடுவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளது. ஏற்கனவே என் நிலத்திற்கு அருகில் அந்த சாலை 1 கிலோ மீட்டர் தள்ளி இருப்பதாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளின் மீது பொய்யான தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

(2 முதல் 5 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டதால் 2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.)

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**